செ.வெ.எண்.90/2009 நாள்: 6.2.2009

**மனித நேய வார நிறைவு விழா மற்றும் பெண்களுக்கான 100 நாள் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

வேலூர் மாவட்டம் அலமேலுமங்காபுரம் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் வளர்கல்வித் திட்டம் சார்பாக மனித நேய வார நிறைவு விழா மற்றும் பெண்களுக்கான 100 நாள் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து பேசுகையில் மனித நேயம் என்பது புதியதானது இல்லை. வெளியிலிருந்து தெரிவிப்பதுமில்லை. மனிதனை மனிதாக நினைத்து ஒருவருக்கொருவர் உதவி செய்வதும், சேவை செய்வதும், பெரியவர்களை மதித்து தினந்தோறும் மரியாதை செய்வதும், சகோதர, சகோதரிகளாக பாவித்து அவர்களின் தேவைகளை செய்வதும், பெற்றோர்களை நேசித்து மதிப்பதும் மனித நேயமே ஆகும்.

எத்தனையோ மாநிலங்களில் ஜாதி சண்டை, மத சண்டை இருக்கிறது. இங்கே மனதுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும் செயல்கள் இம்மாவட்டத்தில் இல்லை என்பதை மாவட்டத்தின் நிர்வாக சார்பாக சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். மனிதனை மனிதன் மதிப்பதே பெரும் மனித நேயமாகும். இங்கே கூறிய கோரிக்கைகள் அனைத்து கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் என் வாழ்க்கையில் மதுரையில் நடந்த சம்பவத்தை உங்களிடம் பகிர்ந்துக் கொள்கிறேன். மதுரையில் நான் குடும்பத்துடன் தங்கியிருந்தபோது பக்கத்தில் கஷ்டம்ஸ் அலுவலகத்தில் பணிபுரியும் ஒருவர் தங்கியிருந்தார். அவரை நான் மாமா என்றுதான் அழைப்பேன் என் தாயாரை அவர் அக்கா என்றுதான் அழைப்பார். பார்ப்பவர்கள் எல்லோரும் எங்களின் உறவினர் என்றுதான் நினைத்தார்கள். ஆனால் அவர் ஆதிதிராவிடத்தை சேர்ந்த ஒரு நண்பர் ஆவார். இதை நான் இங்கே குறிப்பிடுவதற்கு காரணம் ஜாதி, மதத்தை பார்க்காமல் நாம் அனைவரும் இங்கே பழகிவருகிறோம். நாம் அனைவரும் பாரத தாயின் பிள்ளைகள் என நினைத்து தொடர்ந்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும். பள்ளியில் படிக்கும் மாணவர்களாகிய நீங்கள் சிறப்பாக படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கூறினார்.

இந்நிகழ்ச்சிக்கு வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.ஞானசேகரன், இந்திய உணவுக்கழக ஆலோசனை குழு உறுப்பினர் திரு.தி.அ.முகமது சகி, வேலூர் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் திரு.சி.கே.தேவேந்திரன், அலமேலுமங்காபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.எ.ஜி.வில்வநாதன், ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். தாட்கோ மாவட்ட மேலாளர் திரு.எம்.இராமகிருஷ்ணன், அறிவொளி இயக்கம் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ச.சந்தானம், தலைமையாசிரியர் திரு.எஸ்.கோவிந்தன் வாழ்த்துரை ஆற்றினர். ஆதிதிராவிடர் நலத்துறையின் நல வாரிய உறுப்பினர்கள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் திரு.எஸ்.கே.காளி, திரு.கே.மாணிக்கம், திரு.கே.கே.சின்னமுருகன், திரு.எம்.தாமோதரன், ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஈந்நிகழ்ச்சியினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.விஜயகுமார் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெண்களுக்கான 100 நாள் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஊராட்சியினை தேர்ந்தெடுத்து 13 ஊராட்சிகளில் 2348 கல்லாதவர்கள் என கணக்கெடுத்து அவர்களுக்கு தினந்தோறும் 2 மணி நேரம் கல்வி கற்று கொடுப்பதற்கான வளர்கல்வித் திட்டத்தின் சார்பாக தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாகவும், கல்வி கற்றவர்கள் மூலமாக தினந்தோறும் (ஞாயிறு நீங்கலாக) கல்வி கற்றுக் கொடுப்பதற்கான உபகரணங்களையும், மனித நேய வார விழா முன்னிட்டு பேச்சு போட்டி, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.வெ.இராஜலட்சுமி அனைவரையும் வரவேற்றார். விழாவில் பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. விழாவில் ஆதிதிராவிடர் நலம் தனி வட்டாட்சியர் திரமதி.எஸ்.சாந்திபாய் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியினை ஆகியோர் உள்ளனர்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.